Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 126/2018**

வழக்கு சாட்சி எண். PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராக்கன் | கிராமம் | : | மருதிப்பட்டி |
| தந்தை பெயர் | : | நடேசன் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 55 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரிகள் 1, 2 ஆஜர் இல்லை. 1, 2ம் எதிரிகள் சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **3rd** Day of **March 2026.**

**முதல் விசாரணை**

நான் மருதிப்பட்டியில் குடியிருந்துகொண்டு கல்லாவி டாஸ்மாக் கடையில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியாது.

கடந்த 03.07.2013ம் தேதி இரவு 10.00 மணியளவில் நானும், சாட்சி 1 மற்றும் 2ம் அரூர் டாஸ்மாக் கடையில் பணியிலிருந்தபோது வழக்கமான பணியை முடித்து கடையை மூடிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டோம். மறுநாள் காலை நாங்கள் கடைக்கு வந்து பார்த்தபோது கடையின் பூட்டுகள் உடைக்கப்பட்டு செட்டர் சிறிது திறந்திருந்தது. உடனே அசா.1 அரூர் காவல் நிலையத்திற்கு போன் மூலம் தகவல்

தெரிவித்தார். பின்னர் கடையின் செட்டரை திறந்து உள்ளே சென்று பார்த்தோம். மதுபானங்களில் இருப்பு சரியாக இருந்தது. எந்த பொருளும் திருடு போகவில்லை. எனவே டாஸ்மாக் கடை உடைக்கப்பட்டிருந்தது தொடர்பாக அசா.1 அரூர் போலீசாரிடம் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி சம்பவத்தை யார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மதுபானக்கடை அமைந்துள்ள இடம் பொது மக்கள் அதிகம் நடமாடும் இடம் என்றால் சரிதான். காலை 5.00 மணி முதலே அங்கே மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். அந்த சமயத்தில் யாரும் கடையின் கதவு உடைக்கப்பட்டிருப்பதாக எனக்கு எந்த தகவலும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் அங்கு விசாரணையும் செய்யவில்லை. எந்த தடயங்களையும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**